கொடுக்கிருர்கள், இங்கு கொண்டுவந்து விற்கும்போது அதிகவிலே வைக்கிருர்கள் இன்றைக்கு நெல் உற்பத்தியாளர்களைத் தவிர மற்றவர்கள் இப்படித் தான் பாதிக்கப்படுகிருர்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, ரூ. 300 இன்றைக்கு ரூ. 260 ஆக வந்துவிட்டது. அதிகப்படியான பருப்பு இனிமேல்தான் வரவேண்டியிருக்கிறது. இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிருர்கள். ஆகவே, வியாபாரிகள் இன்னும் குறைந்த விலையில் வாங்க முயற்சித்தாலும் முயற்சிக்கலாம். அப்படி முயற்சித்தால், நியாயமான விலையை சர்க்கார் கொடுத்து வாங்க—குறைந்த விலை யில்லாமல், வாங்க—மார்க்கெட்டிலே கொள்முதல் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, தேவைப் பட்டால், அரசாங்கம் கொள்முதல் செய்ய முயற்சிக்கும்.

தெப்பக்காட்டுப் பகுதியில் அலுவலர் குடியிருப்பு.

*798 வினு—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர் தெப்பக்காடு யானைகள் முகாம்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு குடியிருப்பு மனைகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நீலகிரி வடக்கு, வனக்கோட்டத்திலுள்ள கூடலூரில் யானை முகாம் இல்லை. ஆனுல், அதற்கருகில் உள்ள தெப்பக்காட்டில் யானை முகாமிருக்கிறது. அங்கு பணியாற்றுகின்ற 23 பணியாளர்களுக்கு வீட்டு வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சி இருக்கிற 18 பேர்களுக்கு படிப் படியே கொடுக்க திட்டமிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இது போன்ற மலைப்பாங் கான பகுதிகளிலும், காட்டுப் பகுதிகளிலும் வீடுகள் கிடைப்பது கஷ்டம். ஆகவே, ஒரு முனைப்புத் திட்டம் வகுத்து, எல்லா மலைப்பாங்கான இடங்களிலும் வீடு கட்டித் தருவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1974 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது யானை முகாமிலே பணியாற்று கின்றவர்களுக்கு வீட்டு வசதி கொடுப்பது பற்றிய கேள்வியாகும். ஏற்கனவே, 28 பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சியிருக்கிற 18 பணி யாளர்களுக்கு பாக்கி இருக்கிறது. அவர்களுக்கு வீடு கட்டக் கூடிய திட்ட மிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதேபோன்று முதுமலையிலே யிருக்கிற சரணாலயத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? இல்லையென்றால், அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் உடனே செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : முதுமலையிலே 10 பேர்களுக்கு இப்பொழுது வீடு கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கேயும் எஞ்சியிருக் கின்றவர்களுக்கு வீடு கட்டத் திட்டமிருக்கிறது. ஆனை மலைப் பகுதியிலே 26 பேர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க திட்டமிருக்கிறது. இம்மூன்று பகுதிகளிலே தான் யானை முகாம்கள் இருக்கின்றன. வீடு பெறுமலுள்ள எஞ்சியவர்களுக்குக் கட்டிக் கொடுக்கத் திட்டமிருக்கிறது.

மதுரை-திருப்புவனம் பேருந்து வழித்தடம்.

* 799 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் இருந்து திருப்புவனம் செல்லும் 32-எண் பேருந்தினை திருப்புவனம் பேருந்து நிலையம் வரை சென்று வரச் செய்வதற்கான செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. க. நாகராசன் : தலைவரவர்களே, மதுரை மாநகரத்திலே பெரும் பாலான வழித்தடங்கள் இன்றைக்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தி னாலே ஓட்டப்படுகின்றன. எல்லா வழித்தடங்களையும் அரசு மேற்கொண்டு நடத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய திட்டத்தை அரசாங்கம் ஏற்கனவே ஒப்புக்கொண்டு, அதற்கான உத்தரவுகளை விரைவிலே பிறப்பிக்க இருக்கிறது.